இலங்கை
இனப்பிரச்னை:

# இந்தியக்குழுவிஜயம் தோல்வியுற்றால்

## இந்தியாவின் மாற்றுதிட்டம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 20 ஷஃபா 23 இதழ் 81
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 3 5-1986

[சென்னை]

இலங்கைக்குத் தற்போது விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய அரசின் உயர்மட்டக் குழுவின் பணி தோல்வியடையுமானால் இந்திய அரசு, தான் தயாரித்துவைத்துள்ள மாற்றுத்திட்டமொன்றை அமுல்படுத்தும் எனத் தமிழ்நாடு சஞ்சிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

'நியூஸ் ருடே' என்ற மேற்படி சஞ்சிகை தமிழகத்தின் ஆளுங்கட்சியான அ. தி. மு. க. வின் ஆதரவு சஞ்சிகையெனக் கருதப்படுகிறது.

இச் சஞ்சிகை தமிழக மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் கூட்டமொன்றில் ஆற்றிய உரையை மேற்கோள் காட்டி இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ராமச்சந்திரன் தனது உரையில், இந்திய மத்திய அரசு, தமிழ்நாடு மத்திய அரசின் உதவியுடன் இலங்கையின் இனப்பிரச்னைக்குத் தீர்வு சம்பந்தமாக மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளதாகவும், தற்போது இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டுள் இந்திய உயர் மட்டக்குழுவின் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் பட்சத்தில், இந்தியா தனது திட்டத்தை அமுல் செய்யும் எனவும் கூறியதாக இச்சஞ்சிகை தெரிவிக்கிறது.

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க இந்திய அரசு திட்டமொன்றைத் தயாரித்துள்ளது எனத் தமிழக அமைச்சரொருவர் உத்தியோக பூர்வமாகக் கூறியிருப்பது இதுவே முதல்தடவையாகும். திரு. [பண்ருட்டி] ராமச்சந்திரன், இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்திய மத்திய அரசிடம் அடிக்கடி தொடர்பு கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே தமிழகக்கடற்

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசிடமிருந்து

RECEIVED
5-5-1986
PERIODICALS DIVISION
LIBRARY

# எழுத்துமூலவாக்குறுதி இன்று

# இந்தியக் குழு பெறும்

### எச்சரிக்கைச் சுவரொட்டி

( ட்டக்களப்பு)

இரு இயக்கங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல்தொடர்பாக ஒரு இயக்கத்துக்கெதி

[5 ம பக்கம் பார்க்க]

### அரசின் போக்கு பற்றி குழு கவலை

(கொழும்பு)

தற்போது இலங்கை வந்துள்ள இந்திய அரசின் உயர்மட்டக்குழு இலங்கை அரசிடமிருந்து இன்று சில எழுத்து மூலமான உறுதிமொழிகளைப் பெற்றுக்கொள்ளும்.

சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணிக்குடியேற்றம் சம்பந்தமாகவே இவ்வுறுதிமொழிகள் அமைந்திருக்கும்.

கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் 'ஈழநாடு'க்கு இதனைத் தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

### விடுதலைப்புலிகள் பிரமுகர் பாலசிங்கம் செய்தி

[சென்னை]

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரான ஸ்ரீ சபாரத்தினத்தைக் கொல்வதற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதியான பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார் என வந்துள்ள செய்திகளை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகரான ஏ. எஸ். பாலசிங்கம் மறுத்துள்ளார்.

அவர் இதுபற்றி சென்னையில் வெளியிட் ள்ள அறிக்கையொன்றில், வீரமரணமடைந்த தமது இயக்கப் போராளிகளுக்கு அஞ்சலி செய்த மக்களை 'ரெலோ' இயக்கப் போராளிகள் தாக்கியதாகவும், அதுபற்றி விசாரிக்கச்சென்ற தமது இயக்கத்தின் இரு தோழர்களை 'ரெலோ' போராளிகள் கடத்திச் சென்றதாகவும் இதனைத் தொடர்ந்தே தாம் 'ரெலோ' மீது நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார்.

# இலங்கையின் புதிய திட்டம்: சில முக்கிய அம்சங்கள்

கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு இலங்கை அரசினால் இந்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளின் முக்கிய அம்சங்கள் தெரியவந்துள்ளன அவை வருமாறு:

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு இணைப்பின்றிப் பிரதேச சபைகள் வழங்கப்படும்.

இப்பிரதேச சபைகள் இந்தியாவின் பாண்டிச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்கள் கொண்டுள்ள அதிகாரங்களைக்கொண்டிருக்கும்.

ஒவ்வொரு பிரதேச சபையும சுயாதீனமான அதிகாரங்களையுடைய பொலிஸ்படையைக்கொண்டிருக்கும்.

### காணிக் குடியேற்றம்

காணிக்குடியேற்றங்கள் அந்தந்தப்பிரதேசங்களின் வளங்களைக்கொ டு தீர்மானிக்கப்பட்டுப் பிரதேச சபைகளின் சட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். ஆயினும் பிரதேச சபையின் கட்டுப்பாட்டின்கீழ் வராத குடியேற்றத்திட்டங்கள்தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்படும்.

### மொழி:

தற்போதுள்ள அரசியல் யாப்பில் உள்ள மொழி சம்பந்தமான விதிகளில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது. ஆயினும் ஆங்கிலம் ஒரு இணைப்பு மொழியாக ஏற்றுக்கொள்ளப்படும்

அத்துடன் 'பின்னிணைப்பு-சி' பற்றி ஆராய்வதாகவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

### உங்கள் வாகனம் இதில் உண்டா?

#### அத்தாட்சி காட்டிப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

ஒரு இயக்கத்தினால் கடத்திச்செல்லப்பட்டதாகக் கூறப்படும் 15க்கு மேற்பட்ட ஆட்டம் பரச்கார்கள், மினிபஸ்கள் இன்னொரு இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு யாழ். நகரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரிலுள்ள எரிபொருள் விற்னவு நிலையத்தின் திறந்த வெளியில் இவ்வாகனங்கள் கடந்த இருநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன

நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாகனங்களைப் பார்வையிட்ட வண்ணமிருந்தனர்.

இவ்வாகனச் சொந்தக்காரர்கள் தகுந்த அத்தாட்சிகாட்டித்தமது வாகனங்களைப்பெற்றுக்கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-டு நி

உ

## புதுமனைப் புகுவிழா

அன்புடையீர்,

நிகழும் அக்ஷய வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் (5 5-1986 திஙகட்கிழமை காலை 7-55 முதல் 9 30வரை வரும் சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற,

"வாசுகி இல்லம்"

என்னும் புதுமனையில் குடிபுக நிச்சயித்திருப்பதால் அத்தருணம தாங்கள் குடும்பசமேதராய் சமூகம் தந்து எமது புதுமனையை ஆசீர்வதித்து வாழ்த்துமாறு அன்புடன் அழைககின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

தங்கள் நலவரவை நாடும்

திருமதி பா. சரவணமுத்து,
பொ. அ. ஆனந்தவேல் குடும்பத்தினர்,
[A. O. கிளிநொச்சி]
ச. விவேகானந்தராசா குடும்பத்தினர்,
(உரிமையாளர்; உமா இன்டஸ்ரீஸ்)

உமா இன்டஸ்ரீஸ்,
ஸ்ரான்லி வீதி, திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

C-2114

# கடற்படை சுட்டு உதவி அரச அதிபர் படுகாயம்

## இருவர்பலி; கடைகள் எரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் கொல்லப்பட்டனர். சேருவில உதவி அரசாங்க அதிபரான குணதாஸ வணகுலசூரிய படுகாயமடைந்தார்.

இறந்தவர்களில் ஒருவர் கா[illegible] உதவி அரசஅதிபரின் ஜீப்சாரதி பிரேமாதிசநாயகா ஆவர். மற்றவர் ஒப்பந்தக்காரரான தனரத்தினம் [46-வயது]இவர் இளைப்பாறிய நெடுஞ்சாலைகள் திணைக்களத் தொழில்நுட்ப அதிகாரியாவார்.

அன்றிரவு வீட்டிலுள்ளவர்கள்பாரிய வெடிச்சத்தம் கேட்டு

(5 ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ட்ரக்கில்சென்ற 23 சிப்பாய்கள் படுகாயம்

(திருமலையிலிருந்து நமது நிருபர்)

திருகோணமலைக்கடற்படை முகாமைச்சேர்ந்த 23 சிப்பாய்கள் சென்று கொண்டிருந்த ட்ரக் ஒன்று பலத்த வெடிச் சத்தத்தையடுத்துச் சேதமடைந்ததுடன் அதில் சென்று கொண்டிருந்த சிப்பாய் களும்

(8 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

எனது லொறி ''க்ஸ்ராவில்'' 900X20 ரயருடன் 28-4-86 காலை புத்தூருக்கும் இயக்கச்சிக்குமிடையில் தவறி விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவினால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு முகவரி: க. இராசதுரை, மே/பா, கண்ணன் ஸ்ரோர்ஸ், புத்தூர்.
C-2098

### தேவை

புகைப்பட ஸ்தாபனத்திற்கு கலர் பிரின்டிங் அனுபவமுள்ள பெண்கள் தேவை தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 2093, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 2093)

### கல்வி

A/L 87-88 கலை / வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 'B' ஆரம்பம் 07-05-1986. Modern Education Centre, Karaveddy [C1345]

### விற்பனைக்கு

நஷனல் 20'' T. V, ரோஷிபா 20'' B/W T. V- நாஷனல் வீடியோ டெக் 340. விற்பனைக்குண்டு. S T L வீடியோ கிளப், திருநெல்வேலி சந்தி. (C 2094)

தோட்ட சுப்பிரின்டன் ஒருவரின் தரமான வீட்டுத் தளபாடங்கள், அல்மாரி, கண்ணாடி மேசைகள், எழுது மேசைகள், எலக்ரிக் கேற்றில், சிங்கர் குளிர்சாதனப்பெட்டி, T. V., Washing Machine, Pressure Cooker, றேடியோ, புத்தக அல்மாரி, கிளாஸ், கோப்பை வகைகள், Toys, Bedsheets மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு பத்மநாதன், ஆடியபாதம் றோட், மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில். (C 2096)

வலி-கிழக்கு தென்பகுதி
ப. நோ. கூ. சங்கம்,
நீர்வேலி.

### ஏல விற்பனை

எதிர்வரும் 10-05-86 சனிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பொருட்கள் தலைமைக்கந்தோர் வளவினுள் வைத்து ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. பொருட்களை வாங்க விரும்புவோர் குறித்த தினத்தன்று சமுகமளித்து ஏலவிற்பனையில் பங்குபற்றுமாறுகேட்கப்படுகின்றனர்

பொருட்களின் விபரம்:-
சுவீப்பிங் மாவு,
சுவீப்பிங் சீனி,
கோழித்தீன்,
மாட்டுத்தீன்,
நெத்தலித்தூள்,
கொண்டல்கடலை,
றவ்வை, நூல்வகை,
சர்க்கரை, புளி,
மிளகாய், லொறி ரயர்,
ரியூப்,
லொறி உதிரிப்பாகங்கள்,
சீமெந்து குழைக்கும் இயந்திரம்,
வெற்று பரல்,
காட்டுத்தடிகள்,
நெற் யன்னல் கதவுகள்.

பொதுமுகாமையாளர்.
நீர்வேலி.
1986-04 30 [A-634]

சுகாதாரசேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை
யாழ்ப்பாணம்

# அரசாங்க வைத்தியசாலை கட்டிட வேலைகள்

1986ம் ஆண்டு மே மாதம் 20ந் திகதி காலை 10-00 மணி வரை சுகாதாரசேவைகள் பிராந்தியபணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைகளுக்கு ரூபா 50,000/- மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அன்றையதினம் காலை 10-30 மணியளவில் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம். இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கருமவேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலைகள் செய்வதற்கு விரும்புவோர் 1986ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனையிலிருந்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/-ம் திரும்பப்பெற முடியாத பணமாக ரூபா 25/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை இலக்கம் | நிலையத்தின் பெயர் | வேலையின் விபரம் |
|---|---|---|
| 1. | சங்கானை அரசினர் வைத்தியசாலை | 12 படுக்கை கொண்ட சிறுபிள்ளை சிகிச்சை நிலையம். |
| 2. | தொல்புரம்மத்திய மருந்தகம் | உப-பிரிவு சுகாதார நிலையம். |
| 3. | கோண்டாவில் மத்திய மருந்தகம்மருத்துவமனை | உப-பிரிவு சுகாதாரநிலையம். |
| 4. | பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை | 1. பிரசவப்பகுதி ஆயத்தம் செய்தல் அறை(டிலிவெறிறூம்) 2. சவச்சாலை திருத்தம் 3. குடும்பநல சேவையாளர் விடுதிதிருத்தல். |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடிதஉறை இடதுபக்கமூலையில் ''சுகாதாரப் பகுதியின் கட்டிடவேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்குமுன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவேண்டும் அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர்கள் அவருடைய கேள்வி எற்கப்பட்டதென அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திசரமாக செய்துமுடிக்க பிணைப்பணமாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்ட வேண்டும்.

வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபையைச் சார்ந்தது.

சுகாதாரசேவைகள் பிராத்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரசேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம், (A 631)

## பிரயாண ஒழுங்கு

டென்மார்க்

எமது முகவர் இம்மாதம் 15-ந் திகதி
டென்மார்க் அழைத்துச் செல்வார்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

பாஸ்போட், BOND, ரிக்கற்
முதலியனவும் உடனுக்குடன்
செய்து கொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC**
HOSPITAL ROAD, JAFFNA.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக)
(A 473)

# கல்விப் பொருட்காட்சி நடத்த பணிப்பாளர் ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி நிலையை வெளிக் காட்டும் வகையில் பொருட்காட்சிகளை நடாத்தும் திட்டமொன்றினை யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கல்விப் பணிமனையில் நடைபெற்ற கூட்டமொன்றில், பாடசாலைகளிலும், வட்டார ரீதியிலும் பொருட் காட்சிகளை நடாத்தி யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியை வெளிக் காண்பிக்க வேண்டும் என அவர் தமது விருப்பத்தை வெளியிட்டார்.

வட்டார ரீதியில் நடைபெற்ற பொருட் காட்சிகளில் சிறப்பானவற்றைக் கொண்டு மாவட்ட ரீதியில் பொருட் காட்சி நடாத்தப்படும்.

இப் பொருட்காட்சிகளை உரிய முறையில் நடாத்தி முடிக்கும் பொறுப்பு உடற் கல்வி, கல்வி அதிகாரி திரு. தங்கராசாவிடம் ஒடைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான பொருட்காட்சிகள் ஜூன்மாதம் முடிவடைவதற்கு முன்பாகவும், வட்டார ரீதியிலான பொருட்காட்சிகள்செப்டம்பர் 15 ம் திகதிக்குள்ளும் நடாத்தப்படுமென்றும் செப்டெம்பர் மாத இறுதியில் மாவட்டப் பொருட் காட்சி நடைபெறும் என்றும் உடற் கல்வி அதிகாரி திரு. தங்கராசா அறிவித்துள்ளார்.

மாவட்டப் பொருட் காட்சி நாட்டின் சூழ்நிலைக் கேற்ப நடாத்தப்பட முடியாது போனால் சில கல்வி வட்டாரங்களைஒருங்கிணைத்துபொருட் காட்சியினை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

பாடசாலை வட்டாரப் பொருட் காட்சிகளுக்கு தனித்தனி செயற் குழுக்கள் தெரிவு செய்யப்படும் என்றும் மாவட்டச் செயற் குழுவுக்கு சகல வட்டாரக் கல்வி அதிகாரிகளும் பொறுப்பாக இருப்பர் என்றும் அவர் தெரிவித்தார்.

## திருநாவுக்கரசர் குரு பூசை

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை இந்துசமயவிருத்திச்சங்கத்தினர் இன்று சனிக்கிழமை மாலை 5மணியளவில்ஆனைக்கோட்டைமூத்தநயினார் ஆலயத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா நடத்தவுள்ளனர்.

திரு சி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் புராணிகர் திரு வ. பேரின்பநாயகம் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## தேவை

வடமாகாணத்திலுள்ள றேயல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்திற்கு வானில் சென்று விற்பனை செய்யும் பிரதிநிதியுடன் சென்று காசுப்பொறுப்பாளராக கடமையாற்றுவதற்கு ஒருவர் தேவை.

தொடர்பு கொள்ளவும்.

றேயல் இன்டஸ்றீஸ்,
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை. [A474]

# வெளிநாடு பிரயாணம்

கனடா, அமெரிக்கா
செல்வதற்கு ஏற்கனவே என்னிடம்
பாஸ்போட்டும், பணமும் கொடுத்தவர்கள்
உடனடியாக (சனி, ஞாயிறு)
என்னைச் சந்திக்கவும்.

வ. நல்லையா, அளவெட்டி.
(C 2101)

## விக்னு

டியூசன் சென்ரர்
52, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

[வடமாகாணத்தில் கலை, வர்த்தக, வகுப்புக்களுக்கு தனித்துவம் பெற்ற ஒரேயொரு நிறுவனம்.]

A/L 88 புதிய பிரிவு 2

ஆரம்பம்:- 04-05-1986
நேரம்: பிற்பகல் 1-00 மணி.

மு. குறிப்பு:
4-ம் திகதிக்கு முன்னர் உங்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

[A-465]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சோவியத் அணுஆலை விபத்து: மருத்துவ சிகிச்சைக்கு அமெரிக்க

# வைத்திய நிபுணர் அழைப்பு

மாஸ்கோ, மே 2,

**சோவியத் யூனியனின் உக்ரேயின் மாநில சேர்நோபில், அணுசக்தி ஆலை விபத்தையடுத்து ஏற்பட்ட கதிரியக்கத்திஞல் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க அமெரிக்க வைத்திய நிபுணர் ஒருவரை சோவியத்யூனியன் அழைத்துள்ளது. இவர் ஒரு 'எலும்பு மஜ்ஜை' மாற்று மருத்துவத்துறை நிபுணர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

டாக்டர் றிச்சேர்ட்கயெல் என்ற இந்த அமெரிக்க நிபுணர், சோவியத் அணுசக்தி ஆலை விபத்திஞல் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சைகளை அளிப்பார்.

சோவியத்தில் சுமார் 18 பேர் இந்த கதிரியக்கத்திஞல் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை மிகமோசமாக இருப்பதாகவும், இரத்தப் புற்றுநோய்க்கு இவர்கள் உள்ளாகலாம் என்றும் அஞ்சப் படுகிறது.

டாக்டர் றிச்சேர்ட்கயெல் பலவார காலம் சோவியத் யூனியனில் தங்கியிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப் பதினெட்டுப் பேருக்கும் எலும்புமஜ்ஜை பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (Bore Marrow)

இதேவேளை சோவியத்யூனியன் உக்ரெயினில் அணு சக்தி கதிரியக்க வாயு பரவிய பகுதிகளை சுத்தஞ்செய்து வருகின்றது. இக்கதிரியக்கத்தின் தாக்கம் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து நேரிட்ட 'சேர்நோபில்' அணுசக்தி ஆலை மூடப்பட்டுள்ளது. இதன் நடவடிக்கைகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த சோவியத் அணுஆலை விபத்துக்காரணமாக அமெரிக்கா, சோவியத்திலுள்ள அலன் ராஜதந்திரிகள் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அச்சம் வெளியிட்டது. ஆனல் சோவியத்யூனியன் இதைமறுத்தது. மாஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகம் கதிரியக்கத்துக்குள்ளானதா என்பது பற்றி சோவியத் நன்குஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## உலகச் செய்திகள்

'சேர்நோபில்' அணுஆலை விபத்திஞல் இருவர் மட்டுமே இறந்துள்ளனர் என்று சோவியூன்யன் தெரிவித்துள்ளது 200 பேர்சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டு ஆபத்தின் றித்தப்பித்தனர். 18 பேரின் நிலையேகவலைக்கிடமாகவுள்ளது.

எல்சல்வடோரில்

# ராணுவ விமானம் விபத்து: 38 பேர் பலி!

சன்சல்வடோர், மே, 2

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரின் விமானப் படை விமானம் விபத்துக்குள்ளானது இதில் சென்ற 38 இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர்.

எல்சல்வடோர் ஒரு அமெரிக்க சார்பு நாடாகும். நேற்றைய விபத்தில் இந்த நாட்டின் இராணுவத்தைச்சேர்ந்த லெப்டினன்ட் கேணல் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

எல்சல்வடோரின் தலைநகரான சன்சல்வடோருக்கு அருகில் இவ்விபத்து நிகழ்ந்தது. டி ஸி. 9 ரக போக்குவரத்து விமானமொன்றே விபத்துக்குள்ளானது.

இராணுவப் பயிற்சியொன்றுக்காக இந்த விமானம்மேற் குறிப்பிட்ட 38 பேரையும் ஏற்றிக்கொண்டு பனமா சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [கி]

## தாய்லாந்து பராளுமன்றம் கலைக்கப்பட்டது

பாங்கொக், மே 2

தாய்லாந்துபாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதம் 7ம் திகதி பொதுத் தேர்தல் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது

தாய்லாந்தின் பாராளுமன்றின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஆளுங்கட்சிக்குள் ஏற்பட்ட பிணக்குகள் சிலவற்றையடுத்தே தாய்லாந்தின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது

சில அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டர சாங்கமொன்றின் தலைவராக பிரதம மந்திரி ஜெனரல் பிரேம்பின் சுலாநந்தா விளங்குகிறர்.

பராளுமன்றக் கலைப்பையடுத்து ஜெனரல் பிரேம்பின் சுலாநந்தா தாய்லாந்து மன்னர் பூமிபாலை நேற்றுச்சென்று சந்தித்தார்.

பிரேம்பின் சுலாநந்தா கடந்த ஆறுவருடங்களாக தாய்லாந்தில் ஆட்சி செய்து வருகின்றர் இவர் இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றதும் நேரடியாக அரசியலில் இறங்கியிருந்தார்.

கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் தாய்லாந்தில் ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கை ஒன்று முறியடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கி)

## வல்வையில் கண் நோய்

[வல்வெட்டித்துறை]

வல்வையில் கண்நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. பெரியோர், குழந்தைகள் கண் நோயிஞல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். வல்வை அரசினர் ஆஸ்பத்திரியில் பலர்

(6ம பக்கம் பார்க்க)

## 'ஹேலி' மறைகிறது

(புதுடில்லி)

'ஹேலி'ஸ் வால் நட்சத்திரம் . (தூமகேது) வான் மண்டலத்திலிருந்தும் மறைய ஆரம்பித்துள்ளது

கடந்த சில மாதங்களாக வெறுங்கண்களால் கூட தெளிவாகப் பார்க்குமளவிற்கு இந்த வால் நட்சத்திரம் புலனுகியிருந்தது.

தற்போது பூமியில் இருந்து 12 கோடியே 20 லட்சம் மைல்களுக்கப்பால் இந்த வால் நட்சத்திரம் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# வளைகுடா யுத்தம் மீண்டும் மோசம்!

## சமாதானம் நிராகரிப்பு!!

லண்டன், மே 2,

வளைகுடா யுத்தம் கடந்த இருதினங்களாக மீண்டும் மோசமடைந்துள்ளது ஈராக்கிய போர் விமானங்கள் ஈரானிய நிலைகளை நேற்றையதினம் கடுமையாகத் தாக்கிச்சேதப் படுத்தின.

ஈராக்கிய இராணுவநிபுணர் ஒருவர் கருத்து வெளியிடுகையில், ஈரானியர்கள் திருப்பித் தாக்கமுடியாதநிலையில் சோர்வடைந்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை மொராக்கோ நாடு வானெலி வளைகுடாயுத்தம்நிறுத்தம் பற்றி அறிவித்து ஈரான இதற்கு சம்மதித்துள்ளதாக அறிவித்தது ஆனல் இச்செய்தியை ஈரான் மறுத்துள்ளது ஈராக்குடனுனபோர் தொடர்ந்து நடைபெறும் என்று அது அறிவித்துள்ளது

கடந்த ஆறு வருடங்களாக இடம்பெறும் இந்த வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர ஐ நா செயலாளர் எடுத்த முயற்சியொன்றும் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

ஈழத் தமிழருக்கு நீதிகேட்டு

# மதுரை மாநகர் மீண்டும் எரிகிறது

[சென்னையிலிருந்து கே. ஜி. எம்.]

"ஈழத் தமிழர் பாதுகாப்பு மகாநாடு இம்மாதம் நான்காந்திகதி மதுரையில் 'தந்தை செல்வா அரங்கில்' நடைபெறும். அகில இந்தியத் தலைவர்கள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில் பத்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொள்வார்கள். இம்மகாநாட்டை ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு என் டி. ராமராவ் ஆரம்பித்து வைப்பார்"

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு. கருணுநிதி சென்னையில் என்னிடம் தெரிவித்தார்.

முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச்சங்கம் என்று மூன்றுசங்கங்களால் வளர்க்கப்பட்ட மதுரையில்; தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அண்மையில் 'உலகத் தமிழ்ச் சங்கத்தை' ஆரம்பித்து வைத்து. தமிழனைக்கு மேலும் பொலிவூட்டி மதுரை மாநகரைச் சிறப்பித்தார்.

இந்தச் செய்தி. காட்டுத் தீ போல உலகில் பரவ ஆரம்பித்திருக்கும் வேளையில்;

அன்று கோபம் கொண்ட கண்ணகியால் மதுரை மாநகர் எரிந்தது போல்—

ஈழத் தமிழர் படும் இன்னல் கண்டு அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமை கண்டு மதுரை மாநகர் மீண்டும் எரியும் வகையில் இப்பொழுது ஈழத்தமிழர் பாதுகாப்பு மகாநாடு இங்கு நடைபெறுகிறது!

### கலைஞர் பேட்டி

ஈழத்தமிழர் பாதுகாப்பு மகாநாடு பற்றி கலைஞர் மு கருணுநிதி எனக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

''ஈழத் தமிழர் பாதுகாப்பு அமைப்பு [டெஸோ'] சார்பில் ஈழத்தமிழர் பாதுகாப்பு மகாநாடு மே மாதம் நான்காம் திகதி நடைபெறுகிறது அகில இந்தியத் தலைவர்கள் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொள்கிறர்கள் இம்மகாநாட்டில் பலமுக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்

''இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசின் தவருன முடிவைச்சுட்டிக் காட்டவும், மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தத் தவறியதை எடுத்துக்காட்டவும் தான் இம்மாநாடு நடத்தப்படுகிறது. அதேநேரத்தில்; தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை இம்மாநாடு தேசிய ரீதியில் வலியுறுத்தும்

'இலங்கைத் தமிழர் பிரச்னை என்பது, தமிழ்நாட்டுத் தமிழர் பிரச்னை மட்டும் அல்ல; இந்திய மக்களின் பிரச்னை இதுவென்றுசுட்டிக் காட்டவும் இம்மகாநாடு நடக்கிறது.

''மகாநாட்டின் சிறப்பு அழைப்பாளர்களாக, தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்த் தலைவர்கள், மதுரை ஆதீனம், தமிழீழ விடுதலை இயக்கங்களின் ஆறு தலைவர்கள். கலந்துகொள்வார்கள் மகாநாடு அரங்கிற்கு 'தந்தை செல்வா அரங்கு' என்று பெயரிடப்பட்டுள்ளது.'' என்று தலைவர் மு. கருணுநிதி குறிப்பிட்டார்.

'டெஸோ' அமைப்பின் தலைவர் கலைஞர் கருணுநிதி என்பது குறிப்பிடத்தக்கது

### மகாநாடு ஏற்பாடுகள்

இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பு மகாநாடு மே 4ந் திகதி மதுரை ரேஸ் கோஸ் மைதானத்தில் மாலை 5மணிக்குத் தொடங்குகிறது.

மாநாட்டிற்கு 'டெஸோ' தலைவரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் கருணுநிதி தலைமை தாங்குகிறர்.

ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ் தொடக்கி வைத்துப் பேசுகிறர்

### அகில இந்திய தலைவர்கள்

மகாநாட்டில் தெலுங்கு தேச தலைவர் உபேந்திரா (எம்.பி) பாரதிய ஜனதா தலைவர் வாஜ்பாய், ஜனதா தலைவர் மதுதண்டவதே [எம்.பி], கருடைக மந்திரி ராச்சையா (ஜனதா], லோக்தள் தலைவர்கள் எச். என். பகுகுண, டாக்டர் சுப்பிரமணியசுவாமி எஸ். காங்கிரஸ் தலைவர் உன்னி கிருஷ்ணன், பரூக் அப்துல்லா கட்சித் தலைவர் அப்துல் ரஷீதகாபுலி [எம் பி] அகாலிதள் தலைவர் பல்வந்தசிங்வாலியா, அசாம் கணபரிஷத்கட்சித் தலைவர் கோஸ்வாமி [எம்.பி], முஸ்லிம் லீக் தலைவர் பனத்வாலா [எம் பி] ஆகியோர் பேசுகிறர்கள்.

மாநில ஜனதா தலைவர் இரா. செழியன், மாநில முஸ்லிம் லீக் ஏ கே ஏ அப்துல் சமது [எம் எல் ஏ] எஸ்'காங்கிரஸ் மாநில தலைவர் அன்பு வேதாசலம், பாரதீய ஜனதா மாநில தலைவர் நாராயண ராவ், லோக்தள் மாநில தலைவர் எஸ் எல். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பார்வையாளர்களாக கலந்து கொள்கின்றனர்

### அமெரிக்க தமிழர்

அமெரிக்காவில் இருந்து ஈழ விடுதலை முன்னணித் தலைவர் டாக்டர் பஞ்சாட்சரம் கலந்து கொள்கிறர்.

கேரளம், மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில இருந்து பிரதிநிதிகள் வருகிறர்கள்.

மதுரை குதிரைப் பந்தயத் ரேஸ்கோர்ஸ் திடலில் தந்தை செல்வா அரங்கில் மகாநாடு நடக்கிறது

### வரவேற்பு ஆலோசனை

மாநாட்டுக்கு வரும்தலைவர்கள அனைவரும் 4ந் திகதி காலை 9 40 மணிக்கு விமானத்தில் மதுரை வருகிறர்கள்.

விமானநிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்படுகிறது

11 மணிக்கு தமிழ்நாடு ஓட்டலில் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நடக்கிறது.

கூட்டத்தில் மாநாட்டில்

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

பிறப்பு மூப்புப் பெரும்பசிவான்பிணி
இறப்பு நீங்கி இங்கு இன்பம் வந்தெய்திடும்
—அப்பர் சுவாமிகள்

# நமதுநோக்கு

## வேளாண்மை வீடு வந்து சேரும்

பழைய பல்லவி பாடுவதில் பிரயோசனம் இல்லை; வரலாற்றை விளக்கவல்ல மைல்கற்கள் நீர்மட்டத்துக்கு மேலே காணப்படுவது அவசியம்.

தென்தில்லைமன்றை நினைவூட்டும் இந்திய அரசியல் குழுத்தலைவர் திரு. சிதம்பரம் ஒரு சாமானிய அரசியல் தலைவர் அல்ல என்பதை இங்கு அவருக்கு வழிகாட்ட முயலும் அரசின் வால்பிடி பத்திரிகைகள் உணரவேண்டும். தமிழர்கள் இந்தநாட்டில், தங்கள் சொந்த நாட்டில் பாதுகாப்புடனும் மதிப்புடனும்வாழ இந்தியா தன்னாலானது செய்யுமென்ற நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

கொழும்பில் காணப்படும் குதூகலம், வடக்கிலும், கிழக்கிலும் கொழுந்துவிட்டெரியும் பெருநெருப்புக்கு புறம்பானது. கந்தளாய் பற்றி அதிகம் பேசாது அதனைத் திசைதிருப்ப இங்கிலாந்திலிருந்துவந்த பொறியியல் நிபுணர், நாட்டுக்கு விளைந்த பெருநட்டத்தோடு இகழ்ச்சிக்கும் உதவுகின்றனர்.

அணை எவ்வாறு உடைப்பெடுத்ததென்பதை அறியவல்ல நிபுணர் இந்நாட்டில் ஏராளம்; ஆனால் உண்மை வெளிவந்தால் குடி முடிந்தது என்பதே ஆட்சியின் போக்கு

இதனைப் போர்த்து மூடவும், இச்சங்கடத்தை மறப்பிக்கவும் மேதினச்சங்கீதம் உதவுகிறது.

கடந்த ஒன்பது வருடகாலத்தில் நிகழ்ந்த இடர்களனைத்தையும் சமாளித்து வரும் இலங்கை அரசு தமிழர் பிரச்னை பிசுபிசுத்துவிடும் என்று நினைத்திருந்தது உண்மை. இன்று பத்துவருடஆட்சி முடிவில் நிலைமை சீராகும் என்று மீண்டும் ஒருவருட தவணை கேட்டிருக்கிறது.

அரசியல் தீர்வில் இன்று ஆர்வம் காட்டும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இன்று நிகழும் பேச்சுவார்த்தைகள் முடிவில் ராணுவ தீர்வும், அவர் கூறிவந்தது போல சாதகமாய் இருக்குமென்று நம்பலாம்.

அமெரிக்க போர்க்கப்பல் வந்துபோனதும், திருகோணமலையில் மாலுமிகளுக்கு ஆறுதல் நிலையம், கொழும்பில் ஆயிரம் ஏக்கர் கொண்ட வீஓஏ நிலையம்-இவையெல்லாம் இலங்கை அரசை இலகுவில் அசைக்க முடியாதென்பதை, தமிழர் மட்டுமல்ல, சிங்கள எதிர்க்கட்சிகளும் உணரவேண்டுமென்பது ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் பெருவிருப்பம்.

அன்று ரோம், கிறீஸ், பின்பு பிரிட டன், அதனை அழிக்க முயன்ற ஜெர்மனி போன்ற பேரரசுகள்படிந்து மடிந்துவிட்டன. அதே போலின்றுஅகிலஉலகுக்கும் வழிகாட்டமுயலும் அமெரிக்க ஜனாதிபதி, தம்முடைய மக்கள் இந்த முயற்சியை ஆதரிக்க மாட்டார்கள் என்பதை அறியவேண்டும்.

பிலிப்பைன்ஸில் நடந்தது போல சட்டி சுட்டதும் அமெரிக்கா கைவிடத் தயங்காதென்பதை நேரகாலத்துக்கு உணரவேண்டும்.

''2500 ஆண்டு காலமாக இந்நாட்டில் வாழ்ந்துவரும் சிங்கள மக்கள் அணுவளவும் விட்டுக்கொடாமல் தங்கள் பிறப்புரிமைகளை ஒன்றுபட்டு போராட வேண்டியதருணம் வந்துவிட்டது''என்று1957ல்திரு [பின்பு]ஜனாதிபதிஅடி எடுத்துக்கொடுக்க 1958ல் தமிழர்படுகொலை நடந்ததை நாம் மறக்கவில்லை.

இன்று தமிழ்ப் போராளிகள் நிலைமையைத் தலைகீழாக மாற்றிவிட்டனர்.

''யாழ்ப்பாண மக்களின் கருத்துக்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அவர்களைப் பற்றியோ அவர்களது உயிர்ப் பாதுகாப்புக் குறித்தோ நாம் சிந்திக்க முடியாது'' இவ்வாறு தமிழர்மீது1983ல் இனப்படுகொலை அவிழ்த்துவிடுவதற்குமுன் சொன்னார் ஜெயவர்த்தனா.

இன்று இலங்கை வந்திருக்கும் இந்திய அரசியல் குழு தமக்குத் தெரியாத விடயம் எதனையும் நாட்டில் காண்பதற்கில்லை.

''தமிழ்போராளிகள்தங்களுக்குள்ளே மோதிக்கொண்டு பெருங்கொலை நிகழ்த்தியிருக்கின்றனர்'' என்ற செய்தி அரசுக்கு தேனும் பாலுமாகவிருக்கலாம். தமிழ்மக்கள் படும் துன்பத்தில் ஒரு பகுதி இதுவென்று கொள்வதை விட அரசுக்கோ, அரசின் ராணுவத்துக்கோ ஆதரவளிப்பரென்பது வெறும் மனப்பால்.

போராளிகள் எவரானாலும் கலகம் (mutiny) பிறந்துவிட்டால் இத்தகைய அழிவு தவிர்க்கமுடியாததாகும். தமிழ்போராளிகள், ஒற்றுமைப்படாது ஒருவரை ஒருவர் அழித்துவிடுவது என்று நம்பினால் எங்கள் அடிமைத்தனம் நிரந்தரமாகிவிடும் அவ்வித அச்சம் ஆதாரமற்றதென்றே கொள்ள வேண்டும்.

எந்த வகையிலும் இந்த நிலையை நீக்க, ஒருநியாயமான முடிவுகண்டு நாட்டில் சமாதானம் ஏற்படுத்த முயலும் இந்தியா தமிழர்களை நடுக்கடலில் விடவோ, அங்குள்ள போராளிகளை பிடித்து இலங்கை அரசின் கையில் ஒப்படைக்கவோ ஒருப்படாதென்பதை இலங்கைஅரசுஉணரவேண்டும்.

### அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

வல்வெட்டித்துறை கடல் பகுதியில் மரணமான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த இளைஞர்களின் மறைவு குறித்து அஞ்சலி பிரசுரம் ஒன்று சில்லாலை மக்கள் சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. மரணமானவர்களில் மாதகலைச் சேர்ந்த சிவநாதன் (தெய்வா) என்பவரும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மாதகல் பகுதியில் பலத்த சோகம் நிலவியது.

# இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான்



இன்று ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் குருபூசை தினம். ஆண்டு தோறும் ''ஈழநாடு'' ஸ்தாபனத்தார் இக் குருபூசையை பய பக்தியுடன் செய்து வருகிறார்கள். இம்முறை சுவாமி அவர்களின் ஒரு புதுப் படமும் திரை நீக்கம் செய்யப்படவிருக்கிறது. இந்த ஸ்தாபனம் தோன்றிய காணி சிறந்த சிவபக்தை சிவகாமி தாயார் நித்திய சிவபூசை செய்து தெய்வ அருள் பெற்ற இடம். இலக்கண சுவாமியார் சிவகாமி தாயாரின் மைத்துனர் மகன். வண்ணை சிவன் கோவில் மேலை வீதியில் அதாவது இவ்ஸ்தாபனத்துக்கு அண்மையில் வசித்த பரம்பரை சைவவேளாளர் மரபினரான திரு.வெற்றிவேற்பிள்ளைக்கும் தில்லைமுத்து அம்மையாருக்கும்இருபெண்களுக்கும் தம்பியாராகவும்,இருஆண்களுக்கு மூத்தவராகவும் அவதரித்தமுத்துக்குமாரு தனது 14 வது வயதில் ஜீவகாருண்யத்தினால் உந்தப்பட்டு தனது அன்னை, தந்தை உடன் பிறந்தோரையும் தவிக்கவிட்டு தமிழகம் சென்று சைவ சாத்திரங்களைப் பயின்று, துறவு பூண்டு தென்னிந்தியாவில் உள்ளபல சைவ ஞானமும் பெற்று விளங்கிய போதிலும் சிறிதளவு ஆடம்பரமின்றி தூய தவ வாழ்க்கை வாழ்ந்து தமது 64வது வயதில் சிதம்பரத்திலேயே இறைவனடி சேர்ந்தார்.



### ஜீவகாருண்யம் நிறைந்த வள்ளல்

இளைஞன் முத்துக்குமாருவுக்கு சிறுவயதிலேயே சிவபக்தியும், இரக்கமனப்பான்மையும் தோன்றி விட்டது மனிதனோ, மிருகமோ, பறவையோ துன்பப்படுவதைக் கண்டால் இச்சிறுவன் சகிக்கமாட்டான். அக்காலத்தில் வில்லூன்றி தீர்த்தக் கேணி மிகப்பிரசித்தமாய் இருந்தது.

ஸ்ரீராமபிரான் வில்லூன்றிய இடம் என்று சொல்வார்கள். அதிகாலையில் வில்லூன்றிக்குச் சென்று நீராடிவருவது இச்சிறுவனின் வழக்கமாய் இருந்தது. செல்லும்வழியில் ஆடு, மாடுகளை அறுவைக்கு கதறக்கதற இழுத்து செல்லும் காட்சி இளைஞன் முத்துக்குமாருவின் பிஞ்சு உள்ளத்தை தாக்கிவிட்டது. இக் கொடூரத்தை சகிக்கமுடியாமல் தனது தாயாரிடம் பலநாள் கண்ணீர்மல்கி அழுது முறைப்பட்டிருக்கிறான் பலநாள் பட்டினியும் கிடந்திருக்கிறான். இவையாவும் இச்சிறுவனின் தாயார் (எனது பாட்டி) எனக்குச் சொன்ன விபரங்கள்.

## செ. இரத்தினசபாபதி

ஆதீனங்களின் பெரு மதிப்புக்குரியவராகி,அரியபெரிய சைவ நூல்களுக்கு உரைஎழுதி வெளியிட உதவி, சிவக் கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியார் முதலிய பெரியோர்களின் நன்மதிப்பைப் பெற்று ''மாபாடியம்''பதிப்பித்த மாண்புடைய முனிவர்' என்று திரு.கா. சுப்பிரமணியபிள்ளை M A M L என்பவரால் புகழப்பட்டு நிரம்பிய சமயக் கல்வி அறிவும்,

## கலைப்புலவர் கண்ட தம்பிரான்

ஆகமசம்பந்தமாகப் பேசிய பொழுது ஆகம முறைப்படி ஆலயங்களை அமைக்கும் வழக்கம் தேவாரகாலத்திலிருந்தோ என்பதைப் பற்றிப்பேசினோம். பாடல் பெற்ற ஆலயங்கள் யாவும் சோழர்காலத்திலும் பின்பும் திருத்தி அமைக்கப்பட்டபடியால் அவை தேவார காலத்தில் எந்த முறையில் அமைந்திருந்தன வென்பதை இப்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது என்னும் முடிவுக்கே வந்தோம்.

சிவஞானபோதம் தமிழிலா அல்லது வட மொழியிலா முதலில் எழுதப்பட்டதென்பதைப்பற்றிய பேச்சும் எழுந்தது. சுவாமி அவர்கள் அந்நூல் வடமொழியிலேதான் தோன்றியதென்பதே தமது கருத்து என்று கூறினார்கள்...

...பின் சுவாமிகள் தமது நூல்களை நடராஜர் சந்நிதானத்துக்கு பக்கத்தில் தமது குருவாகிய ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் அவர்களின் பெயரால் ஒரு நூல் நிலயத்தை நிறுவி அங்கு வைக்கத் தீர் மானித்திருப்பதாகச் சொன்னார்கள்....

வேதாந்தச்சார்புடைய துறவிகளையே நான் பெரும்பாலும் இதுவரை சந்தித்துள்ளேன். சைவசித்தாந்த மரபைப் பின்பற்றிய துறவி ஒருவரை நான் முதன்முதல் சந்தித்தது இம்முறைதான். ஸ்ரீமதமுத்துக்குமாரத் தம்பிரான் அவர்களின் சைவப் பொலிவும் சிவநெறிச் சிந்தையும் தமிழ் மொழியிலும் வட மொழியிலும் அவர்கள் காட்டிய பற்றும் என்வாழ்க்கையில் நான் மறக்க முடியாத அநுபவங்களாகும். துறவினால் மெலிந்த உடலில் திருவருட் பொலிவினால் ஏற்பட்ட உள்ள நிறைவு அவரிடம் பிரகாசித்தது.

சுவாமி அவர்களுடன் உரையாடுவதில் ஒரு தனிச்சுவை உண்டு. மிகச்சாதுரியமாகவும்

(7 ம் பக்கம் பார்க்க)

## இன்று திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

# 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்'

''சிவனடியார்களின்மார் பணி உருத்திராக்க கண்டிகையாகும். அரையாடை கந்தையாகும். அவர்கள் ஈரம் நிறைந்த அன்புடையோர்; எவ்வித குறையும் அற்றோர். அத்தகையவர்களின் வீரம் என்னால் எடுத்துக் கூறும் அளவினதோ?'' இது சிவனடியாராகிய திருக்கூட்டத்தின் சிறப்புரைக்க வந்த சேக்கிழார் சுவாமிகளின் ஆற்றாமை நிறைந்த கூற்றாகும். இந்தக் கூற்றை மேலோட்டமாகப் பார்க்கையில், ''வீரம் என்பது போருடன் பெரிதும் தொடர்புடையது; வீரம் உடையோர் அதனை வெளிப்படுத்துகையில் இரக்கமற்ற வன்கண்ணராய் விளங்குதலே இயல்பு. இவ்வாறிருக்கச் சேக்கிழார் சுவாமிகளாலேயே விளம்பமுடியாத பெருவீரம் உடைய சிவனடியார்கள் ஈர அன்பினர் ஆதல் எங்ஙனம்?'' என்ற கேள்வி தானாகவே எழும். இதற்கு விடைகாண நாம் திருவள்ளுவரின் 'உரனென்னும் தோட்டியான்'. 'அந்தணர்என்போர்','வேண்டாமை அன்னவிழுச்செல்வம்' ஆகியகுறட்பாக்களை ஆழமாக நோக்குதல்வேண்டும்.

'வீரம்என்பதுகொலையல்ல, வெற்றியும் அதனால் நிலையல்ல' என்றார்

## 'சொக்கன்'

நாமக்கல் கவிஞர். உடல் வலியமலும் ஆயுதவலியலாலும் பகைவரைஅழித்தொழிப்பது ஒன்றுதான் வீரம் அன்று. ''உள்ள உறுதிகொண்டு ஐம்பொறிகளையும் அடக்கி ஆளுதலே உண்மையான வீரம். இத்தகையவீரம்உடையோரே அந்தணர்கள். அவர்கள் எல்லா உயிர்களிலும் அருளே பூண்டு ஒழுகுவர். உலகில் ஏற்படும் துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் என்ன? நிலையாப்பொருள்களை நிலையின எனக்கொள்ளும்பற்றுள்ளமே. எனவே துன்பம் நீங்கப்பெறுவதற்கு வேண்டாமையாகிய பற்றின்மையைக் கொள்வது அவசியம். இந்த உலகில் இல்லாததும் வீட்டு உலகிலே பெறத்தக்கதும் வேண்டாமை என்ற விழுச்செல்வமே'' என்பனவே வள்ளுவப்பெருந்தகை கூறும் அறிவுரைகள்.

'செல்வன் கழல் ஏத்தும் செல்வமே செல்வ'மாகக் கொண்டு 'கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி வீடும் வேண்டா விறலினைப்பூண்டு, வான்துளங்கினும் மண்கம்பமாயினும் மனந்தளராது,பற்றற்றான் பற்றினையே பற்றுக்கோடாய்ப் பற்றி நின்று, 'திருக்கரக் கோயிலான் தன் கடன் அடியேனையுந் தாங்குதல் என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று வாழ்ந்த அப்பர்சுவாமிகளைச் சித்திரைச் சதய நாளாகிய இன்று நினைவு

[7ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Citizen-S4 ஆங்கில தட்டச்சு இயந்திரம் மின்சாரத்தில் இயங்குவது (1.10V) சிங்கர் தையல் மெசின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஆனந்த் வீடியோ சங்குவேலி தெற்கு, மானிப்பாய். C 2106

### வாடகைக்கு

கொக்குவில் அல்லது திருநெல்வேலியில் இரு அறைகளுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடொன்றுவாடகைக்கு தேவை, தொடர்பு: விளம்பர இல: 2105 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். C 2105

சிறிய குடும்பத்திற்கு ஒரு அறை குசினியுடன் வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு: தரன் ஸ்ருடியோ 98, நவீன சந்தை யாழ்ப்பாணம். போன்; 23858. (C 2104)

### தேவை

சீராக இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற் ஸ்தாபனம் ஒன்றிற்கு பேக்கரி வேலை தெரிந்தவர்களும் பிஸ்கற், இனிப்பு வகை தயாரிக்கக் கூடிய பெண்களும் உடன் தேவை. சம்பள விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். பொ. நிதிராசா முருகையன் கோயில் ஒழுங்கை, லஷ்மி பேக்கரி வல்வெட்டித்துறை. C 2102

### தவறிவிட்டது

செல்வி - திருச்செல்வன் சிவஜோதி, புன்னாலைக்கட்டுவன் என்பவரின் அடையாள அட்டை இலக்கம் 635 750 839 பஸ்ஸில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் அல்லது பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். K. K. கணேந்திரன் and Co 68, கன்னதிட்டி றோட் யாழ்ப்பாணம். (C 2107)

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
BODY AND SOUL
(Colour)

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா, கவுண்டமணி
நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

லிபேட்டி சினிமாவில்
றொப்லரின்
புதிய வெளியீடு
அன்று SUPER MAN
இன்று SUPER GIRL
Fare Dunaway நடித்த
அதிக வசூலைக் கொடுத்த
அழகோவியம்
10-30, 2-30, 4-45, 7-00
காட்சிகள் காண்பிக்கப்படும்.


# எழுத்துமூல வாக்குறுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை இனப்பிரச்னை தொடர்பாக இலங்கை அரசின் போக்கில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லையெனத் தற்போது இலங்கை வந்துள்ள இந்திய அரசின் உயர்மட்டக்குழுவினர் கவலை அடைந்திருப்பதாக மிகவும் நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது

நேற்றுக்காலை கிராமியக் கைத்தொழில்அமைச்சர் திரு தொண்டமானைச் சந்தித்த இந்தியக்குழுவினர் இதுபற்றி அவரிடம் கவலை தெரிவித்தனராம் சுமார் ஒரு மணிநேரம் திரு. தொண்டமானுடன் குழுவினர் பேசினர்.

இதனையடுத்து ஜனாதிபதி ஜயவர்த்தனவை அமைச்சர் தொண்டமான் சந்தித்து இவ்விடயம் பற்றி எடுத்துக்கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்க்க இதுவே தக்க சந்தர்ப்பமென்றும் இம்முறையும் இந்தியக்குழுவின்விஜயம் தோல்வியுற்றால் இனிமேல் அங்கிருந்து யாரும் வராமல் இருந்துவிடக்கூடுமெனவும் அதனால் இச்சந்தர்ப்பத்தை இலங்கை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் தாம் எடுத்துக் கூறியதாக அமைச்சர் தொண்டமான் 'ஈழநாடு'க்குத் தெரிவித்தார்.

இதனையடுத்து, ஜனாதிபதி, சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணிக்குடியேற்றம் சம்பந்தமாகத் தமது அரசு தமிழர்களுக்கு வழங்கவிரும்புவதை எழுத்துமூலம் இந்தியக்குழுவிடம் அளிக்கவிருப்பதாகத் தம்மிடம் கூறியதாக திரு தொண்டமான் மேலும் கூறினார். இவ்வெழுத்து மூலஉறுதிமொழிகள் பெரும்பாலும் இன்று இந்திய உயர்மட்டக் குழுவிடம் கையளிக்கப்படும்.

இந்த எழுத்துமூல உறுதிமொழிகள் பின்னர் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியினாலும் அவரது உதவியாளர்களினாலும் பரிசீலிக்கப்பட்டுத் தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இந்திய உயர்மட்டக் குழு நேற்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் சந்தித்தது.

இச்சந்திப்பில் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்கா ஜனுப் ஹமீத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எக்காரணம் கொண்டும் வடக்கும் கிழக்கும் இணைக்கப்படமுடியாதென ஜனாதிபதி திரு. ஜயவர்த்தன தம்மைச் சந்தித்த இந்தியக்குழுவிடம் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

இந்தக்குழு நாளை ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பும். [ய-செ]

## இலங்கை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளுழில் அமைச்சர் சட்டப் பேரவையில் அண்மையில் உரையாற்றுகையில், பாக்கு நீரிணையில் மேலதிக யுத்த விமானங்களையும், கப்பல்களையும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும்படி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார்.

இலங்கை அரசின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றிக் கருத்துத்தெரிவிக்கையில், இந்தியாவின் இந்த நடவடிக்கை இலங்கை அரசைப் பதற்றத்துக்குள்ளாக்கியிருப்பதாகத் தெரிவித்தார். [ய-செ]

## எச்சரிக்கை...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ராக மட்டக்களப்பு நகரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அச்சுவரொட்டிகளில் ஓரியக்கத்தின் தலைவரின் சமூகப் பெயரைக்குறிப்பிட்டு, அவ்வியக்கத்துக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. (மா)

## கடற்படை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பீதியடைந்து மறைவிடத்துக்கு ஓடிச்சென்றனர். இவர் மாத்திரம் வீட்டிலிருந்தார். அப்பொழுது அங்கு வந்த கடற்படையினர் இவரை விசாரணை செய்தபொழுது அடையாள அட்டையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிந்துகொண்டதும் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தீமூட்டி எரித்துவிட்டனராம்.

இச்சம்பவத்தின்போது 3 கடைகள் எரிக்கப்பட்டன; 3 கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. (பா)

# பஸ் சேவைகள் இன்று வழமைபோல்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துச் சேவைகள் யாவும் இன்று வழமை போல் நடைபெறும்.

நேற்று முன்தினமும் போராளிகள் குழுவொன்றினால் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த இருதினங்களும் யாழ். நகரிலிருந்து எந்த வாகனமும் கைதடிக்கு அப்பால் போகாதவாறும் மற்றும் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியிலிருந்து கொடிகாமத்திற்கப்பாலும் செல்லாமல் தடை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. இத்தடைகாரணமாகஅனுராதபுரம், கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கு பஸ்கள் செல்லாததால் பிரயாணத்திற்காகச் சென்றவர்கள் மீண்டும் வீடு திரும்பினர்.

இரு போராளிகள் குழுக்களுக்கிடையிலான மோதலுக்கும் வாகனப்போக்குவரத்துத் தடைக்கும் மிக நெருங்கிய தொடர்பிருப்பதாகத் தகவலறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

### கல்வியங்காட்டில் சோதனை

இது இவ்வாறிருக்க, இருபாலைச் சந்தி. பருத்தித்துறை வீதி சட்டநாதர் கோவில் சந்தி, இராசபாதை உட்படக் கல்வியங்காடு, கட்டப்பராய்ப் பகுதிகளில் மக்கள் நடமாட்டமும் போக்குவரத்தும் ஆயுதம் தாங்கிய இளைஞர் கோஷ்டியினால் தடைசெய்யப்பட்டுள்ளன. கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள வீடுகள் ஒவ்வொன்றும் பிரஸ்தாப இளைஞர்களால் சோதனையிடப்பட்டன.

கல்வியங்காட்டுச் சந்தையுப் கடைகளும் நேற்றுடன் மூன்று நாட்களாகத் திறக்கப்படவில்லை.

இப்பகுதியில் உள்ள மக்கள் தமது வீடுகளிலேயே தங்கியிருந்தனர்.

### சரணடைய வேண்டுகோள்

மற்றும் குறித்த ஓர் இயக்கத்தினர் முகாமிட்டுள்ள இடங்களுக்குச் சென்ற எதிர் இயக்கத்தினர் அவர்களைத் தம்மிடம் சரணடையுமாறு ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தனர். [ஐ]

## அறுவைச் சிகிச்சைகள் தடைப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலிருந்து 41 காஸ்சிலிண்டர்கள் களவாடப்பட்டுள்ளதால் அவசர அறுவைச் சிகிச்சைகள் தடைப்பட்டுள்ளன (மா)

## தெல்லிப்பழையில் செல்வா நினைவுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது சங்கத்தலைவர் திரு சி சிவமகாராசா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சி. க, சிற்றம்பலம் 'தந்தையும் தமிழ்தேசியமும், என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.


எம்பயர் திரையில்
ஜயகாந்—ராதா
அம்மன்கோவில்
கிழக்காலே

வேலையாட்கள் தேவை

கொழும்பு சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனியரின்
நிர்வாகத்தில் அமைக்கப்பட்டுவரும்
மன்னர், வங்காலை, முருங்கன், அடம்பன், (மாண்டை) நீர் விநியோகத் திட்டத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவிக்கு வெற்றிடங்கள் உண்டு.

தச்சுவேலை செய்பவர்கள்

மேலும் நேர்முகப்பரீட்சைக்கு 05- 05- 86 திங்கட்கிழமை காலை 9-00மணிமுதல் 12-00 மணிவரை

சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட்,
206, 208, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்,
நேரில்வரவும். (A 477)

பவர்ஸ் உரம்
இணையற்றது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி; 20551-6

MASTERS ABC 4/82 (B)

ரூபா 2,000/- க்கும் மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 20 [1986 - 5 - 3)
கிழமை: சனி
திதி: தசமி மு. இ. வரை
நக்ஷத்திரம்: சதயம் பி. இ. வரை.

மேடம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலர் எண்ணங்கள் கை கூடும். அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

இடபம்: வியாபாரத்துறையில் விருத்திக்கு இடமுண்டு. செய்தொழில் சிறப்படையும். தாய் வழி சுகக்குறைவும் உண்டு.

மிதுனம்: பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் நடைபெறும். பண வரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியுமுண்டு.

கடகம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். பகைவர் காத்திருப்பர்: போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

சிங்கம்; பொன்னான சந்தர்ப்பமொன்று உங்களைப் பூரிப்படையச் செய்யும். இளம் பருவத்தினருக்கு இன்பப் பூங்கா. தேடிய உறவு உங்களைநாடியே வரும்.

கன்னி: பிறரின் தலையீடு வேதனையைத் தரும். கல்வி விடயத்தில் உஷார் நிலையில் இருக்கவும். அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

துலாம்: பேச்சு வன்மையால் பெருமைக்குஇடமுண்டு. இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவர். நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.

விருச்சிகம்: பொதுப்பணியாற்றுவோர்களுக்குப் பொன்னுனதினம். நான்என்ற அகம் பாவத்தை அடக்கிக் கொள்ளவும் வெற்றியுமுண்டு.

தனுசு: மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான தினம் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

மகரம்: பகைத்தவர்களே உங்களைப் பாராட்டச் செய்வர். பண விவகாரத்தில் பிணக்குகள் தோன்றும்

கும்பம்: மனதில் அமைதி குன்றும். உடல் நலம் பாதகப்படும். சுகாதாரத்தைப் பேணவும்.

மீனம்: குடும்பவாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். நண்பர் ஒருவரின் வருகை உற்சாகத்தையளிக்கும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

# 20 லட்சம் லஞ்சம்

## கொடுக்க முயன்றாராம்

### சி. ஐ டி. வலையில் அரசியல்வாதி

[கொழும்பு]

அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தொண்ணூற்று இரண்டு லட்சம் ரூபா கள்ளநோட்டு விவகாரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள 20 லட்சம் ரூபா லஞ்சம் கொடுக்கச் செல்வாக்குமிக்க ஓர் அரசியல்வாதி ஆலோசனை வழங்கிய விஷயம் இரகசியப் பொலிசாரால் விசாரணைகளின்போது அம்பலமாகியுள்ளது.

உரிய நேரத்தில் பொலிசார் மேற்கொண்ட தலையீட்டின் காரணமாகவே மேற்படி லஞ்சம் வழங்கும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தப்பெரிய கள்ளநோட்டு மோசடி தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன வெனவும்.

கள்ளநோட்டுக்களை அச்சிடப் பயன்படுத்தப்பட்ட அச்சுயந்திரங்கள் எந்த நாட்டிலிருந்து எவர்மூலம் பெறப்பட்டது முதலான விவகாரங்களைப் பெற இரகசியப் பொலிசார் சில வெளிநாடுகளுக்குச் செல்லவுள்ளதாகவும்பொலிஸ் வட டாரங்கள் தெரிவிக்கின்றன. [ஷ]

# நீண்ட இடைவெளிக்குப்பின் மட்டுநகரில் மேதின விழா

[மட்டக்களப்பு]

தொழிலாளர் உரிமைகளை வழங்குங்கள் என்று இதுவரை காலமும் மேதின விழாக்களில் குரல் எழுப்பப்பட்டுவந்தது. இம்முறை இங்கு நடைபெற்ற மேதின விழாவில் தமிழர்களின் உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று பல பேச்சாளர்கள் குரல் எழுப்பியதை அவதானிக்கமுடிந்தது.

மட்டக்களப்பில் கடந்த 10 வருட காலத்துக்குப்பின்னர் மேதினவிழா நேற்று நகர மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் திரு. ஜே. சி. பெர்ணண்டோ தலைமையில் நடைபெற்ற இம்மேதின விழாவின் ஆரம்பத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக இரண்டுநிமிட மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. வணசிங்க இவ்விழாவில் பேசுகையில்;

''தமிழ்ப்பகுதிகளில் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளால் நிகழ்ந்த உயிரிழப்புகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்'' என்றார்.

இவ்விழாவில் ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

''தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஐ. நா சாசனத்துக்கமைய அரசு அங்கீகரிக்க வேண்டும்''

''தமிழ்ப் பிரதேசங்களின் நிர்வாகத்தை தமிழர்களிடமே ஒப்படைக்கவேண்டும்''

''தமிழ் - முஸ்லிம்மக்களின் ஒற்றுமை வலியுறுத்தப்பட வேண்டும்',

''அப்பாவித் தமிழ் மக்கள் கொலைசெய்யப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும்.''

''தொழிற்சங்க உரிமைகளை தடைசெய்யாதே.''

''வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள உயர்வு வழங்க வேண்டும்''

ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களை முகாமில்வந்து கையொப்பமிடவேண்டுமென்ற நடவடிக்கையை உடன் நிறுத்தப்படவேண்டும்''

தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் திரு. பொன் வேணுதாஸ் இத்தீர்மானங்களை முன்மொழிந்தார்.

ஏகமனதாக இத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, [மா]

# நாளைமுதல் தாதிகளின் கறுப்புப்பட்டி இயக்கம்

[கொழும்பு]

நாளைமுதல் ஒருவாரகாலத்துக்கு கறுப்புப்பட்டியணிந்து கடமைக்குச் செல்லும் ஆட்சேப இயக்கத்தை நடாத்துவதற்கு பொதுசேவை ஐக்கியத்தாதிமார் சங்கம் முடிவு செய்துள்ளது.

தாதிமார்களின் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் முன்வராததை ஆட்சேபித்தே இந்தக் கறுப்புப்பட்டி இயக்கம் நடாத்தப்படுவதாகவும், இவ்விஷயத்தில் அரசு தொடர்ந்தும் உதாசீனம் காட்டும் பட்சத்தில் மீண்டும் தாதிமார் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்க நிர்ப்பந்திக்கப்படுவர் என மேற்படி தாதிமார் சங்கத் தலைவர் வண. முறுதெத்துவ ஆனந்த தெரிவித்துள்ளார்.

சாதகமற்ற சூழ்நிலைமைகள் காரணமாக மேற்படி தாதிமார் சங்கத்தின் முன்னைய வேலைநிறுத்தத்தில் பங்குபற்றாத யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை ஆஸ்பத்திரிகளைச் சார்ந்த தாதிமார் எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய போராட்டங்களில் இணைந்து கொள்ளுவார்க்ள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். [ஷ]

**வல்லை**

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் சுத்தமாகவும், சாப்பிடும் உணவு வகைகளை சுகாதார முறைப்படியும் உண்ணும் படி வைத்தியர்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.


இல்லத்தரசிகளே!

சவரின் பார் சோப் வாங்கி ஒவ்வொரு பாரிலும் சேமியுங்கள்.

இந்தச் சவர்க்கார உறையை
திருப்பிக் கொடுங்கள்
புதிய சவர்க்காரம் ரூபா 1/-
கழிவு தொகையில் கிடைக்கும்




விலை ரூ. 15/-

இலகுவானதும், சிக்கனமானதுமான சவரின் பார் சோப்பிலுள்ள கழிவுத்தொகைக் கூப்பன் - நீங்கள் பணத்தை சேமிக்க உதவுகின்றது.

உஙகள வாடிக்கையாளரிடம் மீண்டும் சவரின் பார் சோப் வாங்கும்பொழுது மேலுறைக்கூப்பனைக் கொடுத்து ரூபா 1/– கழிவு பெறுங்கள்.

விரையுங்கள்: இந்தச் சலுகை - சில நாட்களுக்கு மட்டுமே.

BCC
அரசுடைமையாக்கப்பட்ட
பிரிட்டிஷ் சிலோன் கோப்பறேஷன் லிமிட்டெட்
ஹல்ஸ்ரொப் மில்ஸ், கொழும்பு - 12.
தொலைபேசி: 22111/5

சவரின் பார் சோப் நூற்றுக்கு நூறு சுத்தமான தேங்காய் எண்ணெயில் தயாரிக்கப்பட்டது.

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசு எம்மக்களை திட்டமிட்டு அழித்துவருகிறது"

## கழகக் கூட்டத்தில் கருத்து

[கிளிநொச்சி]

"இன்று தமிழ் பேசும்இனம் பலவிததுன்பங்களை அனுபவித்துவருகின்றது ஆட்சியாளர்கள் எமது இனத்தின் கோரிக்கைகளை அலட்சியம் செய்தே வருகின்றனர் இராணுவத்தைக் கொண்டு எம் மக்களை அரசு திட்டமிட்டு அழித்து வருகிறது. நீதி நியாயமற்ற ஆட்சிமுறையே இங்கு உள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி சங்கத்தானை சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இளைஞர் கழகக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் பிரபல சமூக சேவையாளரும் முன்னாள் கிராம சபைத் தலைவருமாகிய ஆசிரியர் அ. ஆறுமுகம் ஜே. பி கூறினார்.

பிரஸ்தாப கழகத்தலைவர் யோ. ஜெயதிலகன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு.ஆறுமுகம்ஜே பி. மேலும் பேசுகையில்;-

"இளைஞர்களது சக்தி மேலோங்கியுள்ள இவ்வேளை வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு தமிழினத்தின் இன்னல் நீங்க பாடுபட வேண்டும் இளைஞர்கள்சரியான வழிகாட்டலின் கீழ் இயங்க வேண்டும். சமுதாயத்தில் நற்புபண்களை வளர்க்கவும் இவர்கள் பாடுபடவேண்டும். இந்த வகையில் சிறந்தசமூக பணிகளை ஆற்றிவரும் சங்கத்தானை இளைஞர் கழகத்தினரின் சேவைகளை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

# ஆரோக்கியக் குழந்தைகள் தேர்வுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நவாலி ஆரம்ப சுகாதர கவனிப்பு நிலையத்தினர் நவாலி கிராம அபிவிருத்தி சபையின் உதவியுடன் அண்மையில் நவாலி வை. எம். சி, ஏ மண்டபத்தில் ஒரு வயதிற்குட்பட்ட ஆரோக்கியமான குழந்தைகளுக்கான தேர்வுப் போட்டி நிகழ்ச்சியொன்றை நடத்தினர்கள்.

நவாலி கிராம அபிவிருத்திச் சபை தலைவர் டபிள்யூ என். தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி பி. கந்தசாமி, யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்களான திரு. திருமதி டாக்டர் எஸ். சரவணபவன் பொது சௌக்கிய சகோதரி திருமதி ஏ சண்முகராசாவும், பொது சௌக்கிய பரிசோதகர் திரு. எஸ் கார்த்திகேசு, நவாலி குடும்ப நல சேவையாளர் திருமதி எஸ். கனகராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வைத்தியர்களால் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டு ஆரோக்கியமான மூன்று குழந்தைகள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன அத்துடன் குழந்தை வளர்ப்பைப் பற்றிய கேள்விகளுக்கு சரியான பதில் அளித்த நான்கு தாய்மாருக்கும் இரண்டு சிறந்த தாய்மாருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்---!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கூர்ந்து வாழ்த்தி வணங்கி உய்திபெறுதல் சைவப்பெருமக்களாகிய எம் அனைவரதும் கடனாகும்.

'தூக்குசீர்திருத் தொண்டத் தொகைவிரி வாக்கினோர் சொல்ல வல்ல பிரான்' சேக்கிழார். அவர் பத்திச்சுவை நனிசொட்டப் பாடிய திருத்தொண்டர் பெரிய புராணத்தில் சமயகுரவர் நால்வருள் மூவரின் வரலாறு விரிவ கப் பேசப்படுகின்றது. வாக்கில் வல்ல சேக்கிழாரே 'பெருநாமச் சீர்பரவலுறுகின்றேன் பேருலகில் ஒருநாவுக் குரைசெய் ஒண்ணுமை உணராதேன்' என்று தமது ஆற்றுமையை வெளிப்பட எடுத்துரைக்கும் அளவிற்கு அம்மூவருள் ஒருவரான அப்பர்சுவாமிகள் விளங்குவாராயின் அவர்தம் பெருமை எம்மால் நினைக்கவும் தகையதோ?

'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகி சிவஞானம்' கைவரப் பெற்ற ஆளுடைப் பிள்ளையாரின் நிலையினைச் சிற்றறிவும் சிறுதொழிலும் எம்மால் எட்டவும் முடியாது. 'தோழமையாக எம்மைத் தந்தனம்' எனச் சிவபெருமானே தம்மை உவந்தளிக்கப் பெற்ற சுந்தரரோ வன்றொண்டர் அவர் இறைவன் மீது கொண்ட உரிமைப்பாடு மிகப் பெரிது. ஆனால் 'மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாரும் திருவதனத்தோடு' வாழ்நாள் முழுவதும் கழிவிரகத்தாற் கசிந்துருகிய வாகீசப் பெருமானின் வழியே எம்மனோர்க்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும்.

வாகீசப் பெருமானின் வாழ்க்கையின் ஆரம்பம் சோகமானது. மரண தேவன் அவரின் குடும்பத்திடையே புகுந்து விளையாடினான். தந்தை மறைந்தார் தாயார் தம் நாயகரோடு உடன்கட்டை ஏறினார். தமக்கையாருக்கு மணம்பேசியிருந்த மணவாளர் செருக்களத்தில் உயிர்துறந்தார், தமக்கையாரும் உடன் கட்டையேற முற்பட்டுத் தம்பியாரின் வேண்டுகோட்கிரங்கி உயிர்விடாது, ஆனால் உள்ளத்துறவுடன் சிவத்தொண்டில் ஈடுபட்டார், ஆக இளம்வயதிலேயே நில்லாவுலகின் நிலையினை உணர்ந்து விரக்தி நிறைந்த மனத்தினராய் அப்பர் வாழநேரிட்டது:

இந்த விரக்தியானது அவரைத் துன்பக் கலப்பில்லாத நிலையான இன்பம் எது என ஆராயத்தூண்டியது தானம், தருமம் முதலான தொண்டுகளாலும் கிடைக்காதஅமைதியைச் சமய ஆய்வின் மூலம் பெற அவர் முற்பட்டார், 'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச் சோதிக்க வேண்டா, சுடர்விட்டுளன் எங்கள் சோதி என உலகினர்க்கு எடுத்துப் போதித்த ஞானபோதகரின் பரிபக்குவநிலை ஏற்படுவதற்கு நம்பன் அருள் அப்பருக்குக் கிட்டவில்லை 'சமயங்களான வற்றின் நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினால் கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம்' குறுகினார். பேரறிவாளனாகிய இறைவனின் நல்ல திருப்பாதங்களைத் தொழாது உண்டுமாம், இல்லையுமாம், உண்டும் இல்லையுமாம், என்று பல வகையாக அறிவு வாதம் செய்து மயங்கிய ஒரு சமயப் பிரிவினருக்குத் தலைவருமானார் திலகவதியாரின் குறையிரப்பால் சிவபெருமான் சூலைநோய் தந்து ஆட்கொண்டபின்னரே அறிவினன் ஆகுவது உண்டோ என்ற தெளிவான விடையும் அவருக்குக் கிடைத்தன.

வெற்றறிவாரத்தால் உண்டான அகந்தை நீங்கியபோது உண்மை அவருக்கு வெளித்தது. அகந்தையால் நிமிர்ந்த தலைகுனிந்து'தலையே நீ வணங்காய்' என்று தம்மைத்தாழ்த்த அவர் முற்பட்டபொழுது 'கொல்லாமை மறைந்துறையும் அபமணம் தன் சுயரூபத்தை அவருக்குக்காட்ட முற்பட்டது. மன்னன், மதிவலி படைத்த குருமார்படை குடி, கூழ் அமைச்செல்லாம் எதிர்த்து அவரை அழிக்கமுற்பட்ட பொழுது அடியவர்க்கே உரித்தான ஞானவீரம் அவருள்ளே புகுந்துகொண்டது. தாமார்க்குங்குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண்குழையோர்காதிற் கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்' அவன்தன் செய்மலர்ச் சேவடி குறுகியபின் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று அவர்தம் அஞ்சாமைக் குரல் முழக்கமிடலாயிற்று. அன்னவரின் 'வீரம் எம்மால் விளம்பும் தகையதோ?'

ஈரநெஞ்சினராய் ஆனால் வீரவீறுடையராய்த் தனிவழி சென்று சைவவாழ்வின் மேன்மையைத் தமிழுலகிற்கு எடுத்துக்காட்டிய வாகீசப்பெருந்தகையாரின் விக்கிரம், நெருக்கடி நிறைந்த இந்தக்காலத்தில் 'ஈரம்நிறைந்த வீரம்' பற்றிய செய்தியைத் தாங்கிக் கொண்டு ஊர்வலமாய்த் திருக்கேதீச்சரத்தை நடிச் சென்று கொண்டிருக்கிறது. ஆலயங்கள், 'கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்ற குறிக்கோளைத் தாரக மந்திரமாகக் கொண்ட யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உள்ளிட்ட கலைக்கழகங்களை எல்லாம் தூய்மை செய்தவண்ணம் அப்பர் சுவாமிகள் செல்கின்றார். 'நாம் ஆர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்ற அவர்தம் வீரமுழக்கத்தின் உண்மைப்பொருளை நாம் உணரமுற்படுவோமாக.

# செய்திச்சிதறல்

## உறுதி பூசுதல் சடங்கு

[நெடுந்தீவு]

நெடுந்தீவுக்கு அருள் விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்ட யாழ் மாவட்ட ஆயர் அருட்திரு தியோகுப்பிள்ளை ஆண்டகை கத்தோலிக்க திருச்சபையை சேர்ந்த சுமார் நானூறு சிறுவர், சிறுமிகளுக்கு உறுதிபூசுதல் சடங்கை நிறைவேற்றி வைத்தார்.

## "ஓதுவார்பணி பாராட்டத்தக்கது"

[சுழிபுரம்]

ஆலயங்கள் தோறும் திருமுறைகளை பண்ணுடன் பாடி யாவரையும் மெய்யுருகச் செய்து வரும் ஆசிரியர் ஓதுவார் மு. கிருஷ்ணபிள்ளையின் தொண்டு காலம் கடந்தாவது பாராட்டப்படுவது மிகவும் பாராட்டத்தக்கதாகும். நிலையக்குரல் வெளியீட்டாளர்கள் திருமுறையை போற்றும் ஒருவரின் பணியை கௌரவிப்பது சிறந்த பணியாகும்."

இவ்வாறு வைத்தியகலாநிதி க. சிவராசா நிலையக்குரல் சிறப்பிதழை அறிமுகம் செய்து பேசுகையில் குறிப்பிட்டார். சுழிபுரம் கம்பளை அம்மன் ஆலயத்தில் இவ்வைபவம் நடைபெற்றது. ஓதுவார் மு. கிருஷ்ணபிள்ளை மாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். புலவர் கி. சுந்தரம்பிள்ளை உட்பட மற்றும் பலர் பேசினர்.

## சிரமதான மூலம் வீதிபுனரமைப்பு

[வவனியா]

ஓமந்தை மாணிக்க வளவு ஊடாக செல்லும் கள்ளிக்குளம் வீதி இரண்டு மைல் தூரம் அப்பகுதி கிராமமக்களின் உதவியினால் சிரமதானம் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது.

சுமார் நூறுபேர்வரை இந்த சிரமதான வைபவத்தில் கலந்து கொண்டனர்.

உதவி அரச அதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை சர்வோதய இயக்க உறுப்பினர்களும் வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

## 7 பேர் சித்தி

(வல்வெட்டித்துறை)

வல்வை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கம், சென்ற வருடம், பாடசாலையைவிட்டு விலகியோருக்காக நடாத்திய இலவச ஆங்கிலச்சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சியில் பங்கு பற்றி அண்மையில் நடந்த க. பொ. த. [சாதாரண] பரீட்சைக்குத் தோற்றிய வல்வெட்டி துறையைச் சேர்ந்த 9 பேரில், 7 பேர் சித்தியடைந்துள்ளனர்.

# ஆசிரியர்உலகம் மாணவர்க்கு உதாரணமாகதிகழவேண்டும்

(உடுவில்)

"ஆசிரியர்கள் வளரும் சமுதாயத்துக்கேற்ப தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். கல்வி உலகம் வளர்ச்சியடைந்து வருகின்றது. வளரும் கல்வி உலகில் மாணவரை நல்ல வழியில் இட்டுச்சென்று உதாரண புருடர்களாக ஆசிரிய உலகம் திகழவேண்டும்.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் வட்டாரக் கல்லூரிகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் அடங்கிய கூட்டத்தில் பேசிய போது இவ்வாறு கூறினார்

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் இக்கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

கல்விப்பணிப்பாளர் தனது உரையில் மேலும் பேசுகையில்.

ஆசிரியத்துவம் என்றால் சமுதாயத்தில் குறைந்த நிலை என்ற மனோ நிலை ஏற்படாது ஆசிரியப்பணியை தெய்வப் பணியாக கருதி செயல் படவேண்டும் மனம் வாக்கு காயத்துக்கு மாறில்லாமல் மாணவனின் நலனை நோக்காக கொண்டுபோதனை செய்வபரே உலகத்தில் கல்விமானவா. தனிப்பட்ட கோபதாபங்களை மறந்து வகுப்பறைக்கல்வியில் கடமையாற்ற வேண்டும் என்றார்

வர்த்தக பாட கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா கைப்பணி கல்வி அதிகாரி திரு. சுப்பிரமணியம், விஞ்ஞானகணித கல்வி அதிகாரி திரு எஸ். நடராசா சித்திர பாட வட்டார கல்வி அதிகாரி திரு ரி. தம்பித்துரை உடற் கல்விஅதிகாரி திரு தங்கராசா ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.

## சந்தையில் திருடர் தொல்லை

(கிளிநொச்சி)

வட பகுதியில் பிரபல்யம் மிக்க சந்தையாகிய சாவகச்சேரிப் பொதுச் சந்தையிலும் பஸ் நிலையத்திலும் முடிச்சு மாறிகளாலும் திருடர்களாலும் தொல்லை அதிகரித்துள்ளதாகப் புகார் செய்யப்படுகிறது.

நுணாவிலைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் 500ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த சில தினங்களுககு முன்பு திருடர்களால் அபகரிக்கப்பட்ட சம்பவமும் மற்றும் ஒருவரது 200 ரூபா பெறுமதியான பொருள்கள் முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்ட சம்பவமும் இச் சந்தையில் இடம் பெற்றுள்ளன.

மற்றும் ஒருவர் சந்தையில் சமான்கள் வாங்கிக் கொண்டு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் புத்தூர் செல்லக் காத்திருந்தவர் சமான்களை வைத்து விட்டுத் தண்ணீர் குடிக்கச் சென்று திரும்பிவர அவரது பொருள்கள் வைத்த இடத்தில் இல்லாமல் இருந்தது கண்டு கவலை அடைந்தார்.

## மிருகபலி

(பண்டத்தரிப்பு)

பிரான்பற்று பகுதியிலுள்ள ஆலயமொன்றில் கடந்த சனிக்கிழமை காலை மிருகபலிஇடம் பெற்றது. நூற்றுக்கு மேற்பட்ட ஆட்டுக் கிடாய்கள் இங்கு பலியிடப்பட்டன. பலியிடப்பட்ட கிடாய்களை வாங்குவதற்காக பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர்.

## மதுரை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றப்படும் தீர்மானம் பற்றி விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

மாநாட்டையொட்டி இலங்கையில் நடைபெறும் கொடுமைகளை சித்தரிக்கும் பெரிய பெரிய ஓவியங்கள் வைக்கப்படுகிறது.

மதுரை நகரில் பல இடங்களில் பேனர்கள் வளைவுகள் அமைக்கப்பட்டு ஈழ தமிழர் [illegible] கள் இடம் பெறும்.

## கலைப்புலவர்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆழமாகவும் [illegible] ஆற்றல் படைத்தவர்களாகச் சுவாமிகள் விளக்கினார்கள் தமது கருத்துக்கு மாறுபட்டோர் கருத்துக்களை எடுத்து மறுக்கும் பொழுது வெகுண்டு மாகவும் விகடத்தோடும் பேசிக் கண்டிப்பார்கள்

சைவமும் தமிழும் பண்டைப் பெருமையுடன் மறுமலர்ச்சியடைவதானால் ஸ்ரீமதமுத்துக்கிமாரத் தப்பிரான் போன்றவர்கள் பலர் தமிழ் நாட்டிலே தோற்றுதல் வேண்டும் அத்தகையோரைத் தோற்றுவிக்கக்கூடிய வகையில் சைவசமுகம் உருப்றுதல் வேண்டும்.

## பலியானர்

(பண்டத்தரிப்பு)

பலாலியில் இடப்பெற்ற இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுச்சப்பவத்தில் சில்லாலை வடக்கைச்சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரவீந்திரன் (வயது 26) என்பவர் பலியானர். கடந்த புதன்கிழமை காலை 7 மணியளவில் பலாலிஇராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நடைபவனியாக தொண்டமனாறு இராணுவ முகாமுக்குச்சென்று கொண்டிருந்தபோது இடப்பெற்ற துப்பாக்கிசூட்டுச் சப்பவத்திலேயே இவர் பலியானர்

பலியான ரவீந்திரன் இராணுவம் நடைபவனியாக வருவதைக் கேள்விப்பட்டு பலாலி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள பற்றை ஒன்றில் ஒளித்திருந்ததாகவும்,வேறு சிலரும் இவருடன் ஒளித்திருந்ததாகவும், அப்போது இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூடு பட்டு இவர் படுகாயமடைந்ததாகவும், உடனடியாக தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு சில மணி நேரத்தில் மரணமடைந்துவிட்டதாகவும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 3 5-86

# அனலைதீவு, எழுவைதீவு மக்களுக்கு கரம்பொன்னில் புதிய இறங்குதுறை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைத்துறை முகத்தைப் பயன்படுத்துவதற்குப் பாதுகாப்புக் காரணங்களையொட்டி அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் கரம்பொன் கண்ணகை அம்மன் கோவிலடியில் இறங்குதுறையொன்று அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் திரு மு. பஞ்சலிங்கத்தை அனலைதீவுப் பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியதை அடுத்து இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களால் ஊர்காவற்றுறைத் துறைமுகம் பாவிக்கமுடியததாக இருப்பதால் அனலைதீவு, எழுவைதீவு மக்கள் நயினாதீவு குறிக்காட்டுவானூடாக ஏறக்குறைய 30 மைலகள் கடந்தே ஊர்காவற்றுறைக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதால் பெருஞ் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

கரம்பொன் கண்ணகை அம்மன்கோவிடிலயில் பாலவேலை செய்துமுடிக்கப்பட்டால் இத்தீவு மக்களின் பிரயாணநேரம் அரைமணிநேரமாகக் குறைக்கப்படும்.

ஊர்காவற்றுறைப்பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் அனலைதீவு, எழுவைதீவுக் கிளைகளில் உணவுப்பொருள்கள் எரிபொருள்கள் என்பன சேமித்துவைக்கப்படுவதில்லை. வாராவாரம் தேவையான பொருள்கள் ஊர்காவற்றுறையிலிருந்தே கொண்டு வரப்படுகின்றன. ஆனால் கடந்த ஒருவருடகாலத்துள் மூன்று தடவைகள் ஊர்காவற்றுறையுடனான தொடர்புகளை இத்தீவுகள் முற்றாக இழந்தன. இதனால் இத்தீவு வாழ் மக்கள் மிகவும் உணவு நெருக்கடிக்குள்ளானார்கள்.

இந்நிலைமையை அனுதாபத்துடன் அணுகிய அரச அதிபர் பாலம் அமைத்து இறங்குதுறையாகப் பாவிப்பதற்கான அனுமதியைப் பாதுகாப்பு இணைப்பதிகாரியிடம் தாம் பெற்றுத்தருவதாகவும் மற்றும் மூன்று மாதங்களுக்குத் தேவையான அவசிய உணவுப் பொருள்களையும் எரிபொருள்களையும் ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்திற்குத் தனியான நிதிமூலம் வழங்க ஆவன செய்வதாகவும் கூறினார்.

கரம்பொன் கண்ணகை அம்மன் கோவிலடி இறங்குதுறை அமைப்பு வேலைகளுக்கு மூன்று லட்சத்துமுப்பதாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## திருக்கேதீச்சர விழாவும் பஸ்சேவையும்

[யாழ்ப்பாணம்]

திருக்கேதீச்சர வருடப் பெருவிழா இம்மாத 14ம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

விழாவுக்குச் செல்லும் அன்பர்களின் வசதிக்காக இம்மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை காலை நல்லை ஆதீனத்திலிருந்து பஸ் ஒன்று புறப்படவுள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் ஆதரவுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பஸ்ஸில் திருக்கேதீச்சரம் செல்லவிரும்பும் அடியார்கள் இம்மாதம் 8ம் திகதிக்குமுன் ஆதீன முதல்வருடன் தொடர்பு கொள்ளலாம். [ப]

## தீவுப் பகுதி வழமைக்குத் திரும்பியது

[வேலணை]

கடந்தமூன்று தினங்களாகத் தீவுப்பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல்களையடுத்து நிலவிவந்த பதற்றம் தணிந்துள்ளது.

எரிக்கப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட வாகனங்கள் வீதிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்துக்கள் சீரடைந்துள்ளன.

பூட்டப்பட்டிருந்த கடைகள் யாவும் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டன. சேதத்திற்குள்ளான கடைகள் திருத்தப்பட்டு வருகின்றன.

தடைப்பட்டிருந்த மின் வேலைகள் வேலணைப்பகுதி மின் அத்தியட்சகர் திரு. விஜயசிறியின் முயற்சியினால் நிறைவேற்றப்பட்டு மின் வெளிச்சம் கிடைத்துள்ளது. குழாய் நீர் விநியோகமும் சீர்நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

## ஊர்காவல் படைத் தளபதிக்குப் பிடிஆணை

(மட்டக்களப்பு)

காத்தான்குடி ஊர்காவல் படைத் தளபதி அப்துல் ஸமது பதூர்டீனுக்கு எதிராக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மட்டக்களப்பு அரசினர் முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ஜனாப் அஸீஸை, ஊர்காவல் படையினர் துன்புறுத்தி அவமானப்படுத்தியதாகக் குற்றம்சாட்டி, மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இது சம்பந்தமான வழக்கு கடந்த புதன்கிழமை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம் எச் காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபொழுது கத்தான்குடி ஊர்காவல் படைத்தளபதிக்கெதிராகப் பிடியாணை பிறப்பித்தார். [மா]

## சுதுமலையில் குருபூசை சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அம்மன் கோவிலில் இன்று மாலை அப்பர் சுவாமிகள் குருபூசை நடைபெறும். விசேஷ அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. ''அப்பரடிகள் அடைந்த துன்பம்'' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு

(முன்னைநாள் ஆற்றுப்பள்ளத்தாக்கு உத்தியோகஸ்தரும், தற்போதைய லங்கா சீமெந்து லிமிட்டெட் ஊழியரும்)

வடலியடைப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அளவெட்டி வடக்கு வாசியுமான கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு காலமாகிவிட்டார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், விக்னேஸ்வரி. பிரபாகரன். ஞானேஸ்வரி, நகுலேஸ்வரி, கோணேஸ்வரி. நளாயினி ஆகியோரின் அன்புத்தந்தையும், காராளசிங்கம் ஜெகசோதியின் அன்புச் சகோதரரும் ஆவார் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (3-5-1986) காலை பத்து மணிக்கு அளவெட்டி வடக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அளவெட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. காராளசிங்கம். (C 2103)

### திருமதி கிறேஸ் நேசம்மா வேதிங்ரன்

[Mrs. Grace Nesammah Worthington]

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கிறேஸ் நேசம்மா வேதிங்ரன் காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற டாக்டர் ஜோண் வேதிங்ரனின் (சிங்கப்பூர்) அன்பு மனைவியும், கிளாடிஸ் தவரட்ணராணி, ஜேம்ஸ் பாலசிங்கம் (U K). றொபேட் ராஜசிங்கம் (சிங்கப்பூர்), அல்பிறட் எதிர்வீரசிங்கம். காலஞ்சென்ற வில்லியம் ஜெயவீரசிங்கம், டெய்ஸ்சி பூமலர் (U K.), பிறின்சி சரோஜினி, காலஞ்சென்ற கிளாஸ்ரன் பொன்ராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், J. C தம்பிராஜா (ஓய்வுபெற்ற ரெயில்வே உத்தியோகத்தர்), ராசமணி, பெலிசியா, சேழி, அற்புதாராணி, றெக்ஸ் தங்கநாயகம் ராஜாட்ணம் (U K), G ஜெயராஜா (நில அளவையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரது நல்லடக்க ஆராதனை 4-5 86 அன்று காலை 9 30 மணியளவில் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நடைபெற்று அடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: G. ஜெயராஜா

[C 2108)

### சின்னத்துரை தனரட்ணம்

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை தனரட்ணம் திருமலையில் அகால மரணமானார் அன்னார் திருமலை நெடுஞ்சாலை (Hjgh ways) ல் கடமை புரிபவரும், சின்னத்துரை தங்கமமாவின் கனிஷ்ட புத்திரனும். திலகராணி (சங்கரத்தை) யின் அன்புக் கணவரும் ரஜீன், ரஜீனின் சகோதரி (10நாள் பெண் குழந்தை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜரட்னம் (சிங்கப்பூர்), இராஜேஸ்வரி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற அரசரட்ணம். பரமேஸ்வரி. விஜயரட்ணம் [மாத்தளை], நாகேஸ்வரி (நைஜீரியா], விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சந்திரகாந்தா, (சிங்கப்பூர்), சிவசம்பு (சிங்கப்பூர் சண்முகம் மகேஸ்வரி, ரஜனி. கணேஸ்வரநாதன் (நைஜீரியா), தியாகராஜா (சவுதி) ஆகியோரின் மைத்துனரும், அரவிந்தனின் அன்பு மாமனருமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, குடும்பத்தினர். [C 2116]

## கற்சிலைமடுவில் கொள்ளை

[ஒட்டுசுட்டான்]

கற்சிலைமடு என்னும் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இளைஞர்கள் பல கொள்ளைகளை நடத்தினர்

இக்கிராமத்தில் வை. சிவஞானலிங்கம், இ வல்லிபுரம், மு. பாலன், க கந்தையா, ச. கந்தையா ஆகியோர்களது வீடுகளில் ஐந்துலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் ரொக்கப்பணமும் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன

கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டுக்காரரைப் பயமுறுத்தியும் அடித்துத் துன்புறுத்தியும் இக்கொள்ளைகளை நடத்தினராம்

## ராக்கிங்: 5 மாணவர்கள் இடைநிறுத்தம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் இடம்பெற்ற ராக்கிங் சம்பந்தமாக, ஐந்து மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இக்கல்லூரி வகுப்புக்கள் இம்மாதம் 12ம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## இன்று தமிழகத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாகத் தமிழகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களினதும் கூட்டமொன்றை முதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரன் இன்று கூட்டுகிறார்

இம் மாநாடு கூட்டப்படுவதற்கு வசதியாக இன்று நடைபெறவிருந்த சட்ட பேரவைக் கூட்டம் நேற்றே நடைபெற்றது. [செ]

## இந்தியக் குழு மறுப்பு

(கொழும்பு)

இந்தியாவில் நிலவும் பொது மக்கள் கருத்தின் காரணமாக இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ்ப்போராளிகளை அங்கிருந்து வெளியேறும்படி இந்திய அரசினால் கேட்க முடியாது என தற்போது இலங்கை வந்திருக்கும் இந்திய தூதுக்குழுவின் தலைவர். திரு சிதம்பரம் எதிர்க் கட்சித் தலைவர் திரு அனுரா பண்டாரநாயக்காவிடம் கூறியிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை அக் குழுவின் பிரதிநிதிகள் மறுத்துள்ளனர்.

அச் செய்தி உண்மைக்குப் புறம்பானதென அவர்கள் மறுத்துள்ளனர்.

## திருமலையில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுகாயமடைந்தனர். இதில் 8 பேரின் நிலை கவலைக்கிடமாயிருப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் திருமலை இந்துக்கல்லூரிக்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்ற வீதியில் கண்ணிவெடி வெடித்தற்கான அடையாளம்எதுவும் காணப்படவில்லையாம்.

இது விஷயம் இவ்வாறிருக்க இப்பாரிய வெடிச்சத்தத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகாமையில் உள்ள கட்டிடங்களும் தேசத்திற்குள்ளாகின

திருமலை இந்துக் கல்லூரியின் சகல யன்னல் கண்ணாடிகளும் உடைந்து நொருங்கியதுடன் கட்டிடத்தில் பலபாகங்களிலும் வெடிப்புகள் தோன்றியுள்ளன.

மேலும் குளிர்பானக்கடை' சைக்கிள்கடை. மற்றும் சில கடைகள் தேசமடைந்துள்ளன.

சம்பந்தப்பட்ட ட்ரக்கினுள் கொண்டுவரப்பட்ட காஸ் சிலிண்டர் வெடித்ததினால் ஏற்பட்ட அதிர்ச்சியாக இதுஇருக்கலாம் என ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

இச்சம்பவம் எப்படி நடைபெற்றபோதிலும் தொடர்ச்சியாகத் துப்பாக்கி வெடிச் சத்தங்கள் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேல் கேட்டவண்ணமிருந்தன. அத்துடன் இரவோடிரவாக சேதமடைந்த ட்ரக்கும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த சிப்பாய்கள் கொழும்பு மற்றும் ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

நகரம் நேற்று வழமைக்குத் திரும்பியது. [மா]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org